இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 11.03.2026

# இந்தியா யார் கட்டுப்பாட்டில்...?

**ரஷ்ய நாட்டில் இருந்து 30 நாட்களுக்கு மட்டும் கச்சா எண்ணெய் வாங்கிக் கொள்ள இந்தியாவுக்கு அமெரிக்கா அனுமதி வழங்கி இருக்கிறது என்ற செய்தி, 'இந்தியா யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது?' என்ற கேள்வியை எழுப்பி இருக்கிறது.**

இந்தக் கேள்வி பலமுறை கேட்கப்பட்ட கேள்வியே ஆகும். அமெரிக்க அதிபராக டிரம்ப் வந்தபிறகு அதிகமாகக் கேட்கும் கேள்வியாக இருக்கிறது.

மறைமுகமாக இருந்த அடிபணிதல் சமீப காலமாக வெளிப்படையாக ஆகிவிட்டது. "பாகிஸ்தான் மீதான இந்தியாவின் போரை நான்தான் நிறுத்தச் சொன்னேன்" என்று தம்பட்டம் அடித்துக் கொண்டார் அமெரிக்க அதிபர்.

கடந்த ஆண்டு மே மாதம் பாகிஸ்தான் மீது 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை களை இந்தியா எடுத்தது. தீவிரவாதிகளின் 9 தளங்கள் மீது ஒருங்கிணைந்த துல்லியமான ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப் பட்டன. பாகிஸ்தானில் 4 தீவிரவாத முகாம்கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 தீவிரவாத முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. லாகூர் உட்பட, பாகிஸ்தான் முழுவதும் உள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளை அழிக்க காமிகேஸ் ட்ரோன்கள் ஏவப்பட்டன. திடீரென இந்தப் போர் நிறுத்தப்பட்டது.

இந்தியா – பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான போர் நிறுத்தப்படுகிறது என்பதை இந்தியா அறிவிப்பதற்கு முன்னால், பாகிஸ்தான் சொல்வதற்கு முன்னால் அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்லி விட்டார்.

**"நாங்கள் இந்தியா பாகிஸ்தான் இடையேயான அணுசக்தி மோதலை நிறுத்தினோம். அது ஒரு மோசமான அணுசக்தி போராக இருந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படி நடந்திருந்தால் மில்லியன் கணக்கான மக்கள் இறந்திருக்கலாம். நீங்கள் இருவரும் போரை நிறுத்தவில்லை என்றால், நாங்கள் எந்த வர்த்தகத்தையும் செய்யப்போவதில்லை என்று நான் கூறினேன்" என்று சொல்லி இருக்கிறார் டிரம்ப். அதாவது தான்தான் போரை நிறுத்தியதாகச் சொன்னார். ஒரு முறையல்ல; இந்த ஓராண்டு காலத்தில் பல முறை சொல்லிவிட்டார் டிரம்ப். ஆனால் இதனை இதுவரை இந்தியா அதிகாரப்பூர்வமாக மறுக்கவில்லை. இது முதலாவது சறுக்கல்.**

அடுத்ததாக இந்திய இறக்குமதிப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரியை அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்தார். இந்தியாவுக்கு மட்டுமல்ல; உலகின் பல நாடுகளுக்கு இது போன்ற வரியை அவர் விதித்தார். இதனை உலகின் பல நாடுகள் கண்டித்தன. எதிர்த்துள்ளன. விமர்சித்தன. பதில் நடவடிக்கைகளில் இறங்கின. ஆனால் இதில் எதையும் செய்ய வில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்த வேண்டும் என்று டிரம்ப் நெருக்கடி கொடுத்தார். அதற்கும் பா.ஜ.க. அரசு பதில் சொல்லவில்லை.

திடீரென்று ஒருநாள், அதனை ஏற்றுக் கொண்டார்கள். அதையும் பொது வெளியில் டிரம்ப் தான் சொன்னார். **"பிரதமர் மோடியுடன் தொலை பேசியில் பேசினேன். ரஷ்யா உக்ரைன் போர் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தோம். ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்திக் கொள்ள பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்தார். இனிமேல் அமெரிக்காவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெயை இந்தியா வாங்கும். வெனிசுலாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது குறித்தும் நாங்கள் ஆலோசித்தோம். இந்த நடவடிக்கைகள் உக்ரைன் போரை நிறுத்த உதவி செய்யும். பிரதமர் மோடியுடன் எனக்கு நட்புறவு நீடிக் கிறது. அவர் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன். அமெரிக்கா இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய நாங்கள் ஒப்புக் கொண் டோம். இதன்படி இந்திய பொருட்களுக்கு அமெரிக்க அரசு இனி 18 சதவீத வரியை மட்டுமே விதிக்கும். அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பிலான எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண் விளைபொருட்கள், நிலக்கரி மற்றும் இதர பொருட்களை வாங்க இந்தியா ஒப்புக் கொண்டிருக் கிறது. அமெரிக்கா, இந்தியா இடையிலான உறவு மேலும் வலுவடையும்"** என்று டிரம்ப் தெரிவித்தார். இது இரண்டாவது மாபெரும் சறுக்கல்.

மூன்றாவதாக இப்போது ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்க 30 நாள் அனுமதியை இந்தியாவுக்கு கொடுத்துள்ளது அமெரிக்கா. இது மாபெரும் சறுக்கல் ஆகும்.

இது மிகப்பெரிய சரணாகதி நடவடிக்கை ஆகும். எந்த நாட்டிடம் எதை வாங்க வேண்டும், எவ்வளவு வாங்க வேண்டும், எதுவரை வாங்க வேண்டும் என்பது இந்தியாவின் சுதந்திரமான கொள்கையாக இருக்க வேண்டும். இதற்கு மற்ற நாட்டின் அனுமதி தேவையில்லை. மற்ற நாட்டின் தயவு தேவையில்லை. மற்ற நாட்டின் கட்டுப்பாடு தேவையில்லை.

இது மிகவும் நெருக்கடியான காலகட்டம் ஆகும். மேற்கு ஆசியாவில் போர் நடந்து வருகிறது. இதனால் கச்சா எண்ணெய் இருப்பின் தட்டுப் பாடு எழப் போகிறது. இந்தியாவுக்குத் தேவையான கச்சா எண்ணெய் இருப்பு 25 நாட்களுக்கு மட்டுமே போதுமானது என்று இந்திய பெட்ரோ லியத் துறை அமைச்சகம் சொல்லி இருக்கிறது. இந்த நிலையில் கச்சா எண்ணெய் வாங்குவதில் சுதந்திரமான முடிவுகளை இந்தியா எடுக்க வேண்டும். அப்படி எடுத்தால்தான் கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டை தவிர்க்க முடியும். அதனைத் தடுக்கிறது அமெரிக்காவின் அறிவிப்பு.

'ஏப்ரல் 4 வரைக்கும்தான் ரஷ்யாவிடம் இருந்து வாங்க வேண்டும்' என்று நிபந்தனை விதிக்கிறார்கள் என்றால் ஏப்ரல் 4 ஆம் தேதியுடன் போர் முடியப் போகிறது என்ற உத்தரவாதத்தை அமெரிக்காவால் தர முடியுமா? இந்தியாவில் கச்சா எண்ணெய் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறதா? ஒவ்வொரு இந்தியருக்கும் ஒரு லிட்டர் தான் பெட்ரோல் தரப்படும் என்று சொல்லப் போகிறார்களா?

**இந்தியாவுக்கு தலைநகர் டெல்லி என்றால், டெல்லிக்கு தலைநகர் அமெரிக்காவா என்று கேட்கும் நிலைமைக்கு வெளியுறவுக் கொள்கையை மாற்றி அமைத்து விட்டதா பா.ஜ.க. அரசு?**



திருச்சியில் நேற்று முன்தினம் (9.3.2026) மாலை நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் கலந்துகொள்ள திருச்சி விமான நிலையத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டர்கள், பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



திருச்சியில் நேற்று முன்தினம் (9.3.2026) மாலை நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் கலந்துகொள்ள திருச்சி விமான நிலையத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டர்கள், பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### தி.மு.க. 12வது மாநில மாநாட்டில் பங்கேற்கச் சென்ற

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு திருச்சியில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

### அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் கழக முன்னணியினர் பங்கேற்பு!

திருச்சி, மார்ச் 11 –

"ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்!" திருச்சியில் தி.மு.க.வின் 12வது மாநில மாநாடு.

மாநாட்டில் பங்கேற்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சி சென்றடைந்தார்,

திருச்சி விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தி.மு.க.வினர் உற்சாகமாக வரவேற்றனர்.

தி.மு.க. மாநில மாநாட்டில் பங்கேற்பதற்காக திருச்சி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சி வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி, மு.பெ.சாமிநாதன், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### திருத்துறைப்பூண்டி நகரக் கழகம் சார்பில்

## கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

### ஏ.கே.எஸ்.விஜயன் – சௌமியன் – ஆர்.எஸ்.பாண்டியன் வழங்கினர்!

திருவாரூர், மார்ச் 11 –

முதலமைச்சர், திராவிட நாயகர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய பிறந்தநாள் விழா திருவாரூர் மாவட்டம் முழுவதும் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகளின் படி கழக கொடியேற்றப்பட்டும், ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும், மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டும், நகர பகுதிகளைச் சேர்ந்த கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்பட்டும் எழுச்சியோடு கொண்டாடப்பட்டு வருகிறது.

திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில், நகரச் செயலாளர் ஆர்.எஸ். பாண்டியன் ஏற்பாட்டில், 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது.

திருத்துறைப்பூண்டி தொகுதி பார்வையாளர் சௌமியன் வைத்தியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தலைமங்கலம் ஜி.பாலு, ப.ஆடலரசன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், நகர் மன்றத் தலைவர் கவிதாபாண்டியன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னிலை யேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்த விழாவில் வார்டுகள் தோறும் அரசு விதிகளின்படி கழகக் கொடி ஏற்றுதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், தெருக்கள்தொறும் நிழல் தரும் மரங்களை நடுதல், மார்ச் 1 அன்று அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் வழங்குதல், ஆயிரம் பேருக்கு அறுசுவை அசைவ உணவு வழங்குதல், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குதல், ஆதரவற்றோர் இல்லங்களில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு புத்தாடைகள் வழங்குதல், சாலையோர வியாபாரிகளுக்கு நிழற்குடைகள் வழங்குதல், மாற்றுத் திறனாளிகளுக்கு புத்தாடை வழங்குதல், தூய்மைப் பணியாளர்களுக்கு சீருடை வழங்குதல் என பல்வேறு நலத்திட்ட உதவிகள் நகர தி.மு. கழகம் சார்பில் நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

முன்னதாக முத்து கராத்தே பள்ளி மாணவ, மாணவிகளால் பாரம்பரிய சிலம்பாட்டம்,

சுருளாட்டம், மான்கொம்பு பயிற்சி நடத்திக்காட்டப்பட்டது. திருத்துறைப்பூண்டி நகர, ஒன்றிய பகுதிகளில் உள்ள பள்ளிகளில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு பொருட்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

நகரப்பகுதியில் உள்ள கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழியை தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் அனைவருக்கும் வழங்கினார். 1000 க்கும் மேற்பட்டோருக்கு அறுசுவை உணவுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் வரவேற்புரையும், நகர இளைஞர் அணி அமைப்பாளர் வசந்த் என்கிற முருகவேல் நன்றியும் கூறினார்.

நகரக் கழகச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழாக்களில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர் கழக நிர்வாகிகளும் கழகத் தோழர்களும், சமூக ஆர்வலர்களும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்த னர்.



திருச்சி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழியைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். 'திராவிட மாடல்' அரசில் வெல்லும் தமிழ்ப் பெண்களாக மிளிரும் அனைவரும் சமூக பொருளாதார விடுதலைப் பெற்று, அடக்கு முறையாளர்களையும் சாதனைகளால் வெல்வீர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திட்டங்கள் உங்களின் வளர்ச்சிக்கு என்றும் துணை நிற்கும். மகளிர் அணி நிர்வாகிகளை வாழ்த்தி வழி அனுப்பினார். மகளிர் அணி நிர்வாகிகள் கயல்விழி, பொற்கொடி, ரம்யா பேகம் மற்றும் மகளிர், மகளிர் தொண்டர் அணியினர் கலந்து கொண்டனர்.